பக்கங்கள் 11+2

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | கார்த்திகை 17 செவ்வாய்க்கிழமை 03.11.2024 | அதிர்வு 124

**கொள்ளுப்பிட்டியில் இன்று**

## மாடியிலிருந்து கீழே குதித்து ஆஸி. பிரஜை உயிர்மாய்ப்பு

கொழும்பு – கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் உள்ள தொடர்மாடி குடியிருப்பு ஒன்றின் 7ஆவது மாடியிலிருந்து கீழே குதித்து ஆஸ்திரேலியப் பிரஜை ஒருவர் 02▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# இனவாதம் தலைதூக்க இடமளியோம்

### நாடாளுமன்றில் பிரதமர் ஹரிணி திட்டவட்டம்

"அரசியலில் தோல்வி கண்ட சில குழுக்கள் நாட்டில் மீண்டும் இனவாதத்தைத் தூண்டுவதற்கு முயற்சிக்கின்றன. இனவாதத்தைத் தோற்கடிப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்."

- இவ்வாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

"நாட்டு மக்கள் இனவாதம் மற்றும் சந்தர்ப்பவாத அரசியலை நிராகரித்துள்ளனர். தேர்தல் முடிவுகளும் அதனையே வெளிப்படுத்தின.

இந்நிலையில், தோல்வியடைந்த அரசியல் குழுக்கள் மீண்டும் தமது அரசியல் நிகழ்ச்சிநிரலைக் கொண்டு செல்ல இனவாதத்தைத் தூண்டி, இனவாதக் கருத்துக்களைப் பரப்பி மக்களைப் பிளவுபடுத்த முற்படுகின்றன. 02▶

# பருத்தித்துறைக் கடற்பரப்புக்குள் ஊடுருவி மீன்பிடித்த 18 இந்திய மீனவர்கள் சிக்கினர்

(ந.லோகதயாளன்)



இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடித்த 18 இந்திய மீனவர்கள் இன்று கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

காரைக்காலைச் சேர்ந்த 18 இந்திய மீனவர்கள் ஒரு படகில் பருத்தித்துறை கடற்பரப்புக்குள் ஊடுருவி மீன்பிடியில் ஈடுபட்ட சமயம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இன்று காலை கைது செய்யப்பட்ட அவர்கள், கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மேற்படி 18 இந்திய மீனவர்களும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைதான 23 இந்திய மீனவர்களும் விடுவிப்பு



**(ந.லோகதயாளன்)**

யாழ். நெடுந்தீவுக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் கடந்த நவம்பர் மாதம் 10ஆம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 23 பேரும் நிபந்தனையுடன் இன்று விடுதலை செய்யப்பட்டனர்.

23 பேரும் இன்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் சிறைச்சாலை அதிகாரிகளால் நீதிவான் நளினி சுபாஸ்கரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.

வழக்கை ஆராய்ந்த நீதிவான் இந்திய மீனவர்கள் 23 பேருக்கும் 6 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருடங்கள் சிறைத்தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார்.

23 மீனவர்களில் 3 பேர் படகோட்டிகள் என்றதன் அடிப்படையில் தலா 40 இலட்சம் ரூபா அபராதத் தொகையைச் செலுத்தும் அதேவேளை 6 மாதச் சிறைத் தண்டனையும் மேலதிகமாக வழங்கி நீதிவான் உத்தரவிட்டார். அபராதத் தொகையைச் செலுத்தத் தவறின் 6 மாதங்கள் சிறைத்தண்டனைக்கு மேலதிகமாக 3 மாத சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிவான் தீர்ப்பளித்தார்.

# யாழில் வடக்கு மாகாண வர்த்தக சந்தை







**(எஸ்.நிதர்ஷன்)**

வடக்கு மாகாண தொழிற்றுறைத் திணைக்களமும் இந்தியத் துணைத் தூதரகமும் இணைந்து நடத்தும் வடக்கு மாகாண தொழிற்றுறை வர்த்தக சந்தை யாழ். கலாசார மத்திய நிலையத்தில் இன்று ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

மூன்று நாட்கள் நடைபெறவுள்ள இந்தச் சந்தை, காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறவுள்ளது.

மேலும் மாலை 5 மணி முதல் இரவு 8 மணிவரை விசேட கலாசார நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இன்றைய ஆரம்ப நாள் நிகழ்வில், இந்தியத் துணைத் தூதரகத்தின் முதல் நிலை அதிகாரி, வடக்கு மாகாண பிரதம செயலாளர் எல்.இளங்கோவன் ஆகியோர் கலந்துகொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

இந்தச் சந்தையில் நெசவு உற்பத்திகள், கைப்பணி உற்பத்திகள், உணவு உற்பத்திகள், ஆடை உற்பத்திகள், விவசாய உற்பத்திகள் மற்றும் தொழில் வழிகாட்டல், வியாபார ஆலோசனைகள் உள்ளடங்கலாக 60 கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**இனவாதம்...**

ஆனால், இனவாதம் மீண்டும் தலை தூக்க அரசு இடமளிக்கப் போவதில்லை. இத்தகைய செயற்பாட்டை ஒடுக்குவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம்.

எதிர்க்கட்சியிலும் இனவாதத்தை புறக்கணிக்கும் எதிர்க்கும் பலர் உள்ளனர். அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம். மக்கள் எம்மிடம் மாற்றத்தை எதிர்பார்க்கின்றனர். அதனால் வரலாற்றின் பாடங்களை உணர்ந்து சிறந்த நாட்டை உருவாக்க ஒன்றிணையுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுகின்றோம். அதனைத்தான் மக்கள் எதிர்பார்க்கின்றனர்." – என்றார்.

**மாடியிலிருந்து...**

உயிரிழந்துள்ளார் என்று கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் இன்று காலை இடம்பெற்றுள்ளது.

51 வயதுடைய ஆஸ்திரேலியப் பிரஜையே உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் இந்தத் தொடர்மாடி குடியிருப்பில் தற்காலிகமாகத் தங்கியிருந்த நிலையில் தனது உயிரை மாய்த்துக்கொள்வதற்காக 7 ஆவது மாடியிலிருந்து கீழே குதித்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் இரட்டைப் பிரஜாவுரிமை பெற்றவர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிணற்றில் தவறி வீழ்ந்து இளைஞன் உயிரிழப்பு!



முல்லைத்தீவு, முள்ளிவாய்க்காலில் கிணற்றில் தவறி வீழ்ந்து இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று திங்கட்கிழமை (02) காலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய இளைஞன் ஆவார்.

உயிரிழந்த இளைஞன் தனது தாயுடன் வசித்து வந்துள்ள நிலையில் உயிரிழந்துள்ளார்.

சம்பவ தினத்தன்று தாய் வீட்டில் இருந்து வெளியே சென்று மீண்டும் வீடு திரும்பிய போது இளைஞன் வீட்டுக்கு அருகில் உள்ள 15 அடி ஆழமுடைய கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்திருப்பதை கண்டுள்ளார். இதனையடுத்துப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாணவருக்குப் புத்தகக் கொள்வனவுக்கு அஸ்வெசும ஊடாக உதவி வழங்கத் திட்டம்

அஸ்வெசும பெறும் பெற்றோர்கள், விசேட தேவையுடையவர்கள், சிறுவர் இல்லங்களில் உள்ள விசேட தேவையுடைய பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை புத்தகங்களை கொள்வனவு செய்வதற்கு 6 ஆயிரம் ரூபா உதவித் தொகை வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

இந்த திட்டத்தை அடுத்த தவணையில் இருந்து நடைமுறைப்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகப் பிரதமரால் முன் வைக்கப்பட்ட அமைச்சரவைப் பிரேரணைக்கு நேற்று (02) அனுமதி கிடைத்துள்ளது என்று ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரான அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.



# இரத்தினக்கல் வர்த்தகர் ஒருவரின் சூட்கேஸ் திருடிய பணிப்பெண் கைது!


ஒருவரின் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இரத்தினக்கல் வர்த்தகர் ஒருவரின் 13 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் வைத்திருந்த பொதியை திருடிய வீட்டுப் பணிப்பெண் ஒருவர் இன்று (03) காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெஹிவளை களுபோவில பகுதியைச் சேர்ந்த மொஹமட் ஜசின் நவாஷ் என்ற 34 வயதுடைய இரத்தினக்கல் வர்த்தகரின் பயணப் பொதியே இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

இந்த "டீசயனெ வுரஅஅ" சூட்கேஸ் மாத்திரம் சுமார் 06 லட்சம் ரூபா பெறுமதியானது. அத்துடன், இந்தத் தொழிலதிபருக்கு சொந்தமான இரத்தினக் கற்கள், காலி இரத்தின பொதி பெட்டிகள், தொழிலதிபரின் ஆடைகள் மற்றும் பல பெறுமதியான பொருள்கள் அந்த சூட்கேஸில் இருந்துள்ளன.

இவர் கடந்த 28ஆம் திகதி அதிகாலை 03 மணியளவில் தோஹாவில் இருந்து கட்டார் எயார்வேஸின் எம். ஆர். -632 விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

ஹெம்மாத்தகம பெதிகம்மன பிரதேசத்தில் வசிக்கும் 56 வயதுடைய வீட்டுப் பணிப்பெண் இந்த விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்துள்ளார். இவரைத் தேடிய விமான நிலையப் பொலிஸார் அவரது வீட்டில் இருந்து ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களை மீட்டுள்ளனர்.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA




# இடைநிறுத்தப்பட்ட உயர்தரப் பரீட்சை நாளை மீண்டும் ஆரம்பமாகவுள்ளது!

தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நாளை (04) முதல் மீண்டும் ஆரம்பமாக வுள்ளது என்று பரீட்சைகள் திணைக் களம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை கடந்த 25 ஆம் திகதி ஆரம்ப மாகிய நிலையில், சீரற்ற காலநிலை காரணமாக 27 ஆம் திகதி முதல் பரீட்சை நடவடிக்கைகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டன.

இதனை தொடர்ந்து, நாளை முதல் மீண்டும் பரீட்சை ஆரம்பிக்கப்படும் எனவும், நாளைய தினம் இடம்பெற வுள்ள பாடங்களின் படி பரீட்சைகள் வழமை போன்று நடைபெறும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள் ளார்.

பரீட்சை நடைபெறாத நாள்களில் நடத்தப்பட்ட பாடங்களை எதிர்வரும் நாள்களில் நடத்துவதற்கு திட்டமிடப்பட் டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சைகளை நவம்பர் மாதம் 25 ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதிவரை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சீரற்ற காலநிலை காரணமாக பரீட்சைகள் இடைநிறுத்தப் பட்டன. இந்த நிலையில், இடை நிறுத் தப்பட்ட பரீட்சைகள் நாளை (04) ஆரம் பமாகி டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக் கது.




# சிலாபம் - ஆனமடுவ வீதியில் விபத்தில் பெண் உயிரிழப்பு!

சிலாபம் – ஆனமடுவ வீதியில் பல்லம, பிரதேசத்தில் கெப் வண்டியும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றிரவு இடம்பெற்ற விபத்தில் மாதம்பே, தானியவல்லகம பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய பெண் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் காயமடைந்த 32 வயதுடைய, உயிரிழந்த பெண்ணின் கணவன் சிகிச்சைக்காக சிலாபம் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்துக்குள்ளான கெப் வண்டி சிலாபத்தில் இருந்து ஆனமடுவ நோக்கி சென்ற போது முன்னால் சென்ற தம்பதியின் மோட்டார் சைக்கிள் மீது மோதியுள்ளது.

விபத்துடன் தொடர்புடைய கெப் வாகனத்தின் சாரதி பல்லம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் அட்டபாகே, பிடகம பிரதேசத்தில் வசிக்கும் 37 வயது டையவராவார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ரில்வின் ஆரம்பித்த 'பல்டி'!

மாகாணசபை முறைமை தொடர்பாக தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசின் பிரதான பங்காளிக் கட்சியான மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்த கருத்துகள் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன.

இலங்கையில் நடைமுறையில் உள்ள அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள மாகாண சபை முறைமையை முடிவுக்குக் கொண்டு வரவும், புதிய அரசமைப்பின் ஊடாக அனைத்து இன மக்களுக்கும் சமமான உரிமைகள் கிடைப்பதை உறுதி செய்யவும் தேசிய மக்கள் சக்தி அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று அவர் கூறியிருக்கின்றார்.

"37 வருடகாலமாக நடைமுறையில் உள்ள மாகாண சபை முறைமையால் நாட்டுக்கோ அல்லது தமிழ் மக்களுக்கோ எவ்விதமான பலனும் இது வரையில் கிடைக்கவில்லை. மாறாக இலங்கையில் அநாவசியமான பிரச்சினைகளை தோற்றுவிக்கும் வகையிலான நிலைமையே காணப்படுகின்றது. எனவே, சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் பிரச்சினைகளை தோற்றுவிக்காத வகையிலான அரசியல் ரீதியிலான தீர்வுத் திட்டத்தை எமது அரசு முன்வைக்கும்." - என்றும் அவர் மேலும் கூறினார்.

இந்தக் கருத்து தர்க்க ரீதியில் சரி போல தோன்றினும், அதை அவர் குறிப்பிட்ட முறைமையும், அதைத் தாண்டி அவர் அதை முன்வைத்த கடூரப் பாணியும் முறையற்றவை. இனங்களுக்கு இடையில் சமரச அரசியலை முன்னெடுக்க வேண்டிய அரசின் போக்குக்கு முற்றிலும் தலைகீழானவை.

தங்களுடைய தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வாக 13 ஆவது திருத்தத்தை தமிழர்களும் முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை என்பதுதான் உண்மை. ஆகவே 13 ஆவது திருத்தத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழ வேண்டிய கட்டாயம் ஏதும் அவர்களுக்கு இல்லை. ஆனால், அதுவும் இல்லாவிட்டால் அடுத்தது என்ன என்ற மகா பயங்கரமான கேள்வி ஒன்று அவர்களுக்கு முன்னால் உள்ளது.

"13க்கு அப்பால் - மாகாண சபைகளுக்கு அப்பால் - தமிழர்களும் விரும்பி ஏற்கும் மாற்றுத் தீர்வை நாம் முன்வைக்கும் போது மாகாணசபை முறைமை இல்லாமல் போகும்" என்று சொல்வதற்கும், மாகாண சபை முறைமையை ஒழிப்போம் என்று கூக்குரலிடுவதற்கும் வித்தியாசம் உண்டு.

தவிரவும், அவரது இந்தக் கருத்து சில மாதங்களுக்கு முன்னர் அவரது தரப்பு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு முற்றிலும் முரணானது என்பதை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தமது எக்ஸ் பதிவில் சுட்டிக் காட்டியிருக்கின்றார். தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்துத் திடீர் புதுமை செய்த தமிழ் மக்கள் கூட அந்த அரசின் இத்தகைய குத்துக்கரணத்தை இவ்வளவு விரைவாக எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

2015 - 2019 ஆண்டு காலத்தில் நல்லாட்சி அரசினால் முன்னெடுக்கப்பட்டு, அரைக் கிணறு தாண்டிய நிலையில் இருக்கும் புதிய அரசமைப்பு முயற்சி தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்றும், அதுவரையில் இப்போதைய மாகாண சபைகள் முறைமை முழுமையாக முன்னெடுக்கப்பட்டு, அந்த முறைமை அதன் மூலம் (புதிய அரசமைப்பு மூலம்) வலுப்படுத்தப்படும் என்றும் ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளிக்கப்பட்டிருக்கின்றமையை சுமந்திரன் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

புதிய அரசமைப்பு நடைமுறைக்கு வரும் வரையில் தற்போதைய 13 ஆவது திருத்தம் முழு அளவில் நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி வேட்பாளராக தமிழர்களின் மூளைமையமான யாப்பாணத்தில் வந்து நின்று கொண்டு கூறியவர் அநுர குமார திஸநாயக்க. அவரது கட்சியின் பொதுச் செயலாளர் - அவரது தளபதி - இவ்வளவு விரைவாக தேசிய இனப்பிரச்சினை விவகாரத்தில் அவர் தரப்பின் குத்துக்கரணத்தை ஆரம்பித்து வைப்பார் என்பது எதிர்பாராத வேகமான அரசியல் திருப்பம்தான்.



# மன்னாரில் சீரற்ற காலநிலையால் 7,500 ஹெக்ரெயர் நெல் அழிவு!

## வங்கிக் கடன்களை ரத்துச் செய்யுமாறு விவசாயிகள் கோரிக்கை

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஒரு வார காலமாக நிலவி வந்த சீரற்ற கால நிலைகாரணமாக 7 ஆயிரத்து 603 ஹெக்ரெயர் விவசாய செய்கை அழி வடைந்துள்ளது என்று மன்னார் மாவட்ட கமநல சேவைகள் நிலையம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் இலுப்பைக் கடவை கமநல சேவை நிலையத்ததுக்கு உட்பட்ட 1100 ஹெக்ரெயர் விவசாய நிலங்களும் மாந்தை பகுதியில் 1168 ஹெக்ரெயர் , நானாட்டானில் 768 ஹெக்டேயருமாக ஒட்டு மொத்தமாக 7603 ஹெக்ரெயர் விவசாய செய்கை அழிவடைந்துள்ளன.

இந்த முறை மன்னார் மாவட்டத்தில் காலபோக செய்கைக்கு என 11776 ஹெக்ரெயர் விவசாயச் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் 4173 ஹெக்ரெயர் விவசாய செய்கை மாத்திரம் தற்போது பகுதி அளவில் காப்பாற்றப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இம்முறை விவசாய செய்கைக்காக பல விவசாயிகள் அரச மற்றும் தனியார் வங்கிகளிலும், கிராம மட்ட அமைப்புகளிடமும் கடன்களை பெற்றுள்ள நிலையில் அவற்றை மனிதாபிமான அடிப்படையில் அரசு தள்ளுபடி செய்து தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# நாய்கள் சாப்பிட்ட நிலையில் மீட்கப்பட்ட குழந்தையின் கால்

## சிலாபத்தில் பொலிஸார் விசாரணை

சிலாபம் கடற்கரையில் உள்ள சுற்றுலா விடுதிக்கு அருகில் நாய்கள் சாப்பிட்ட நிலையில் குழந்தையின் கால் ஒன்றை மீட்ட பிரதேசவாசிகள், பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று (02) பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

சிலாபம் பகுதியில் குழந்தை காணாமல் போனமை தொடர்பில் எந்தவொரு முறைப்பாடும் அண்மைய நாள்களில் கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிலாபம் பொது வைத்தியசாலையிலும் அவ்வாறான குழந்தை மரணம் குறித்த தகவல் எதுவும் பதிவாகவில்லை எனவும் பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் இந்தக் குழந்தையின் காலை நாய் எங்கிருந்து கொண்டு வந்தது என்று சிலாபம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.





# மாற்றுத் திறனாளிகள் தினம் இன்று திருமலை செயலகத்தில்

(ஹஸ்பர்)

சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினமான இன்று (03) திருகோணமலை மாவட்ட செயலகத்தில் மாவட்டத்தின் பிரதான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சமூக சேவைகள் திணைக்களமும் மாவட்ட செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த மாற்றுத் திறனாளி நிகழ்வு மாவட்ட செயலக மண்டபத்தில் பல்வேறு கலை கலாசார நிகழ்வுகளுடன் இடம்பெற்றது.

இந்த முறை தொனிப்பொருளாக "உள்ளடங்கிய மற்றும் நிலையான எதிர்காலத்துக்காக மாற்றுத் திறனாளிகளின் தலைமைத்துவத்தை மேம்படுத்தல்" என்ற தொனிப்பொருளின் கீழ் குறித்த மாற்றுத் திறனாளிகள் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

மாற்றுத் திறனாளிகளின் கலை, கலைசார நிகழ்வுகளும் இதன் போது அவர்களது திறன்களை வெளிக்கொணர ஒரு களமாக அமைந்திருந்தது.

குறித்த நிகழ்வில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி கலந்து கொண்டார்.

மாவட்ட சமூக சேவைகள் இணைப்பாளர் த.பிரணவன் உட்பட பிரதேச செயலக சமூக சேவைகள் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சிறுவர் அபிவிருத்தி நிதிய உத்தியோகத்தர்கள், மாற்றுத் திறனாளிகளின் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.







# கரைவலை மீனவர்களும் வெள்ளத்தால் பாதிப்பு

(பாறுக் ஷிஹான்)

அடை மழை காரணமாக ஏற்பட்ட வெள்ள நீரை வெளியேற்றும் முயற்சியில் கடலை அண்டிய தோணாக்கள் தோண்டிய பகுதிகளில் ஆற்று வாழைகள் எனப்படும் ஒரு வகையான தாவரங்கள் நிரம்பிக் காணப்படுகின்றன.

இதனால் மீனவர்கள் பெருஞ் சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

கடந்த ஒரு வார காலமாக வடக்கு – கிழக்கு ஆகிய பிரதேசங்களில் ஏற்பட்ட பாரிய வெள்ள அனர்த்தம் காரணமாகத் திறந்து விடப்பட்ட குளங்கள் மற்றும் ஆறுகளில் இருந்து இவ்வாறான தாவரங்கள் கடலுடன் சங்கமித்திருப்பதாக மீனவர்கள் குறிப்பிட்டனர்.

இவ்வாறு கடற்கரையில் கரையொதுங்கிய ஆற்றுவாழை மற்றும் ஆகாய தாமரை போன்ற சல்லு தாவரங்களால் கரைவலை மற்றும் ஆழ்கடல் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது தவிர கடற்கரை பகுதியில் இவ்வாறான தாவரங்கள் அதிகமாக காணப்படுவதால் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள முடியாது மீனவர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அதுமாத்திரமன்றி இந்தத் தாவரங்களில் நச்சுப் பாம்புகள் இதர உயிரை கொல்லும் பாம்புகளும் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.



கரையொதுங்கிக் காணப்படும் இந்தத் தாவரங்களில் ஏரிகள் மற்றும் குளங்களில் காணப்படுகின்ற பாம்பு போன்ற விஷ ஜந்துக்களும் மக்கள் வாழ்விடங்களை நோக்கி வருகின்ற ஒரு துர்பாக்கிய நிலையும் காணப்படுகின்றது.

மாலை வேளையில் கடற்கரையை நோக்கி தமது ஓய்வு நேரங்களைக் கழிக்கக் கூடிய சிறுவர்கள் மற்றும் பெண்கள் உள்ளிட்ட மக்கள் வருகின்ற போது இவ்வாறான ஜந்துக்களால் உயிராபத்துக்கள் ஏற்படுகின்ற நிலையும் காணப்படுகிறது.

கரையோரப் பாதுகாப்பு, மாநகர சபை, பிரதேச செயலகங்கள், தன்னார்வு தொண்டு நிறுவனங்கள், பொதுமக்கள் இவற்றை கவனத்தில் கொண்டு கரையோரப் பிரதேசங்களைச் சுத்தம் செய்து தமது தொழிலை மேற்கொள்ளவும் பாதுகாப்பானது ஒரு சூழலை ஏற்படுத்தித் தருமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# புதிய பொலிஸ் ஊடகப் பேச்சாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மனதுங்க

புதிய பொலிஸ் ஊடகப் பேச்சாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.பி. மனதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இதற்கு முன்னர் கந்தளாய் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றியுள்ளார்.

இதேவேளை, பொலிஸ் ஊடகப் பேச்சாளராக இருந்த பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவ அந்தப் பதவியில் நீக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.



பொலிஸ் ஊடகப் பேச்சாளராகக் கடமையாற்றிய காலத்தில் ஊடகவியலாளர்கள் கேட்கப்பட்ட, பல்வேறு சம்பவங்கள் தொடர்பில் தனக்குத் தெரியாது என பதிலளித்த பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவ, கடுமையாக விமர்சிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் தற்போது அவர் பதவி நீக்கப்பட்டுள்ளார்.

எனினும், குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபராகத் தொடர்ந்தும் பணியாற்றுவார் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

# திருவண்ணாமலை மண்சரிவு; ஐந்து பேரின் சடலங்கள் மீட்பு

ஃபெங்கல் புயலின் தாக்கத்தால் திருவண்ணாமலையில் பெய்த கன மழையின் காரணமாக நேற்று முன் தினம் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் உயிரிழந்த 7 பேரில் 5 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன எனவும், மீதமுள்ளோரின் உடல்களை மீட்கும் பணியில் மீட்புக்குழுவினர் ஈடு பட்டு வருகின்றனர் என்றும் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்ட துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தச் சம்பவத்தில் இறந்தவர்களின் குடும்பத்தாருக்கு தலா 5 லட்சம் ரூபா இழப்பீடு வழங்க முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, திருவண்ணாமலை மண் சரிவு பேரிடருக்கு தீர்வு என்ன என்பது குறித்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தனது கருத்தைப் பகிர்ந்துள்ளார். திருவண்ணாமலையில் மகாதீபம் ஏற்றப்படும் மலையில் ஏற்பட்ட திடீர் மண் சரிவில் சிக்கி ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 சிறுவர்கள் உட்பட 7 பேர் உயிரிழந்தனர்.

முன்னதாக, திங்கள் கிழமை மாலை நடந்த மீட்புப் பணிகளைப் பார்வையிட்ட பின்னர் உதயநிதி ஸ்டாலின் செய்தி யாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கருத்து தெரிவிக்கையில்,

“ஃபெங்கல் புயலால், தமிழ்நாட்டின் 14 மாவட்டங்கள் இதுவரை கண்டிராத அளவுக்கு பாதிப்பை சந்தித்து இருக் கின்றன. இதனால் ஒன்றரை கோடி பேர் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 2 லட்சத்து 11 ஆயிரம் ஹெக்டேர் விவசாய நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வீதிகள், பாலங்கள் என ஏராளமான முக்கிய கட்டுமானங்கள், உட்



கட்டமைப்புகள் சேதமடைந்துள்ளன. இந்த மிகப் பெரிய பாதிப்பைக் கருத்தில் கொண்டு, ஒன்றிய அரசு, தேசிய பேரிடர் நிதியில் இருந்து உடனடியாக முதற் கட்டமாக, 2,000 கோடி ரூபா அவசர மீட்பு மற்றும் புனரமைப்பு நடவடிக்கை ளுக்காக விடுவிக்க வேண்டும் என்று நம்முடைய முதல்வர், பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

முதல்வர் உத்தரவின்படி, பாதிக்கப்பட் டுள்ள ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று அங்கு நடைபெறும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை ஆய்வு செய்து வருகின்றோம். பொதுமக்களுக்கு நிவாரணப் பொருள்களை வழங்கி வருகிறோம். ஞாயிற்றுக் கிழமை சென்னை, செங்கல்பட்டு, கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் கனமழை பாதிப்புகளை ஆய்வு செய்தோம். திங்கட் கிழமை, முதல்வர் உத்தரவின் பேரில், மதியம் முதல் தருமபுரி, கிருஷ்ணகிரி, மாவட்டங்களில் ஆய்வை முடித்துவிட்டு, திருவண்ணாமலை மாவட்டத்துக்கு வருகை தந்து ஆய்வு செய்துள்ளோம்.

கனமழையால், தமிழ்நாட்டையே சோகத்தில் ஆழ்த்தக்கூடிய ஒரு சோகமான சம்பவம் திருவண்ணா மலையில் நடந்துள்ளது. திருவண்ணா மலையில் வ.உ.சி நகர் 11 ஆவது தெரு வில் வசித்து வந்த ராஜ்குமார் என்பவரது வீட்டின் மீது தொடர் கனமழை காரணத் தால், மலையிலிருந்து ஒரு பெரிய பாறை உருண்டு வந்து வீட்டின் மேல் விழுந்துள்ளது. இதில், அவருடைய வீடு, மண் மற்றும் பாறையால் முழுவ துமாக மூடப்பட்டு புதையுண்டது.

இந்த வீட்டிற்குள் இருந்த ராஜ்கு மாரின் மனைவி மீனா (வயது 27), அவரது 8 வயது மகன் கௌதம், 5 வயது மகள் இனியா, அவர்களுடைய பக்கத்து வீட்டைச் சேர்ந்த 7 வயதான ரம்யா, 14 வயது நிரம்பிய விநோதினி மற்றும் 7 வயதான மகா ஆகியோர் இடிபாடுகளுக்குள் சிக்கி இறந்துள்ளார் கள். எப்படியாவது நல்ல செய்தி வரும், 7 பேரும் உயிருடன் மீட்கப்படுவார்கள் என்று தான் எதிர்பார்த்தோம். ஒட்டு மொத்த தமிழ்நாட்டு மக்களும் அதைத் தான் எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால், மண்ணில் புதைந்த வீட்டில் சிக்கிய வர்கள் உயிரிழந்தனர்.

கனமழையால் மலையிலிருந்து ஏற்பட்ட மண்சரிவு மற்றும் பாறை சரி வில் சிக்கி 7 உயிர்கள் பறிபோயிருப்பது மிகுந்த வேதனைக்குரியதாகும். அவர்களின் மரணத்துக்கு என்னுடைய இரங்கலை அரசு சார்பாக தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும், அவர்களின் உறவினர்களுக்கு என்னுடைய ஆறு தலை தெரிவித்துக் கொள்கின்றேன். தமிழ்நாடு முதல்வர், உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு இழப்பீடாக தலா ரூபாய் 5 லட்சத்தை வழங்க உத்தரவிட் டுள்ளார். அதனை செவ்வாய்க்கிழமை மாலைக்குள் கொடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லியிருக்கின்றேன்.

மேலும், திருவண்ணாமலையில் மண் சரிவு ஏற்படுவதால், அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு தந்து பொதுமக்கள், பாதுகாப்பான இடங்க ளில் தங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.”– என்றார்.

# குவைத் விமான நிலையத்தில் சிக்கித் தவித்த இந்திய பயணிகள்

குவைத் விமான நிலையத்தில் 13 மணி நேரத்திற்கும் அதிகமாக சிக்கித் தவித்த 60 இந்திய பயணிகள் இறுதி யாக கடந்த திங்கள் கிழமை அதிகாலை மான்செஸ்டருக்கு புறப்பட்டனர்.

இது குறித்து எக்ஸில் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ள குவைத்தி லுள்ள இந்தியத் தூதரகம்,

நேற்று அதிகாலை 4.34 மணிக்கு மான்செஸ்டருக்கு கல்ஃப் ஏர் விமானம் இந்தியப் பயணிகளுடன் புறப்பட்டதாகக் கூறியது.

அதேநேரம், விமானம் புறப்படும் வரை தூதரக ஊழியர்கள், பயணிகளு டன் விமான நிலையத்தில் இருந்னர் எனவும் குறிப்பிட்டுள்ளது.

மும்பையில் இருந்து இங்கிலாந்தின் மான்செஸ்டருக்கு ஞாயிற்றுக்கிழமை ஜி.எப். 005 என்ற கல்ஃப் ஏர் விமானம்



மூலம் இந்திய பயணிகள் பயணத் துள்ளனர்.

விமானத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறினால் மேற்படி விமானம் அவசரமாக குவைத் விமான நிலையத் தில் தரையிறக்கம் செய்யப்பட்டது.

விமான நிலையத்தில் சிக்கியிருந்த போது, உணவு, தங்குமிடம் அல்லது அடிப்படை உதவிகளை விமான நிறு வனம் வழங்கத் தவறியதால், அசௌ கரியத்தை எதிர்கொண்டதாக பயணிகள் முறைப்பாடுகளை பதிவு செய்தனர்.

சில பயணிகள் விமான நிலைய அதிகாரிகளுடன் வாக்குவாதம் செய்யும் காணொலிகள் சமூக ஊடகங்களில் வெளிவந்தன.

இந்த விடயம் தொடர்பில் உடனடியாக கவனம் செலுத்திய குவைத்தில் அமைந் துள்ள இந்தியத் தூதரகம், குவைத் திலுள்ள கல்ஃப் ஏர் உடன் இணைந்து விரைந்து நடவடிக்கை எடுத்தது.

அதேநேரம், பயணிகளுக்கு உதவ வும் விமான நிறுவனத்துடன் ஒருங் கிணைக்கவும் தூதரகத்தின் ஒரு குழு விமான நிலையத்தில் இருந்து இதற் கான பணிகளை மேற்கொண்டிருந்தது.

இறுதியாக விமானம் நேற்று அதி காலை 4.34 மணிக்கு மான்செஸ்டருக்கு புறப்பட்டதாகவும் குவைத்திலுள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

# பிரான்ஸ் அரசாங்கம் இவ்வாரம் பதவி நீக்கம் செய்யப்படலாம்



பிரதமர் மைக்கேல் பார்னியர் தலைமையிலான பிரான்ஸ் அரசாங்கம் இந்த வார இறுதியில் பதவி நீக்கம் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக் கையில்லா பிரேரணை முன்வைக் கப்பட்டுள்ளதை அடுத்து இந்த எதிர்பார்ப்பு மேலோங்கியுள்ளது.

பிரான்ஸ் தற்போது கடுமையான பொருளாதார மற்றும் அரசியல் நெருக் கடியை எதிர்கொண்டுள்ளது.

இந்த நிலையில், அங்கு அடுத்த ஆண்டுக்கான பாதீட்டுக்கு அனுமதி வழங்கப்படுமா என்பதில் சந்தேகம் எழுந்துள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில், மைக்கேல் பார்னியர் தமக்கான சிறப்பு அதிகாரங்களைப் பயன்படுத்தி சட்ட மூலமொன்றை நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதனையடுத்து, அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, பிரதமர் மைக்கேல் பார்னியர் தலைமையிலான அரசாங்கம் பதவி நீக்கம் செய்யப்படுமாயின் 1962 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நம்பிக்கை யில்லா பிரேரணை மூலம் வெளியேற் றப்பட்ட முதல் பிரான்ஸ் அரசாங்கமாக இது கருதப்படும்.

# பிலிப்பைன்ஸில் கடல் ஆமையை உட்கொண்ட மூவர் உயிரிழப்பு



பிலிப்பைன்ஸில் அழிந்து வரும் கடல் ஆமை இறைச்சியை உட்கொண்ட மூன்று பேர் உயிரிழந்துள்ளனர். குறைந்தது 32 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பிலிப்பைன்ஸின், Maguindanao del Norte மாகாணத்தில் உள்ள ஒரு கட லோர நகரத்தில் கடந்த வாரம் இந்த உணவை சாப்பிட்டதிலிருந்து பல பழங் குடி டெடுரே மக்கள் வயிற்றுப் போக்கு, வாந்தி, வயிற்றுப் பிடிப்பு போன் றவற் றினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

டிசம்பர் 1 ஆம் திகதி நிலவரப்படி, வைத்தியசாலைகளில் அனுமதிக்கப் பட்ட 31 நபர்கள் வெளியேற்றப்பட்டுள் ளனர்.

அதே நேரத்தில் ஒருவர் சிகிச்சை பெற்று வருகிறார்.

கடந்த நவம்பர் 25ஆம் தேதி பிடிபட்ட கடல் ஆமையின் இறைச்சியை உட் கொண்டதாகக் கூறப்படும் Maguindanao del Norte இல் உள்ள Barangay Linao. Datu Blah Sinsuat ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் பலியானதாக Baguindali கூறினார்.

பிலிப்பைன்ஸின் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டங்களின் கீழ் கடல் ஆமைகளை வேட்டையாடுவது அல்லது உட்கொள்வது சட்டவிரோதமானது.

எனினும், கடல் உயிரினங்கள் இன் னும் சில சமூகங்களில் பாரம்பரிய உணவாக உண்ணப்படுகின்றன.

# பணயக் கைதிகளை விடுவிக்க டொனால்ட் ட்ரம்ப் காலக்கெடு



2025 ஜனவரி 20 ஆம் திகதி பதவியேற்பதற்கு முன்னதாக பணயக் கைதிகளை விடுவிக்காவிட்டால் பாரிய பின் விளைவுகளை சந்திக்க நேரிடும் என அமெரிக்க ஜனாதிபதியாக தெடுக் கப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப், காசா போராளிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள் ளார்.

நவம்பர் 5 அமெரிக்கத் தேர்தல்களுக் குப் பிறகு போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முட்டுக்கட்டையான முயற்சிகள் குறித்து நேற்று முன்தினம் வெளியான ட்ரம்பின் அறிக்கை மிகவும் வலுவாக இருந்தது.

மேலும் அவர் தனது இரண்டாவது பதவிக்காலம் தொடங்கும் முன் போர் நிறுத்தத்தை எட்டுவதற்கு அழுத்தம் கொடுக்கிறார் என்ற செய்திகளுக்கு மத்தியில் வந்துள்ளது.

இஸ்ரேல் மீதான 2023 ஆம் ஆண்டு கொடிய தாக்குதலின் போது, ஹமாஸ் தலைமையிலான போராளிகள் 250 க்கும் மேற்பட்டவர்களைக் கைப் பற்றினர்.

இவர்களில் பலர் விடுவிக்கப்பட்டுள்ள னர்.

அதேநேரம், காசாவில் இன்னும் இரகசியமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள 101 வெளிநாட்டு மற்றும் இஸ்ரேலிய பணயக்கைதிகளில் பாதி பேர் உயிரு டன் இருப்பதாக நம்பப்படுகிறது.

இந் நிலையில் நவம்பரில் அமெரிக் காவின் அடுத்த ஜனாதிபதியாக தேர்ந் தெடுக்கப்பட்டுள்ள ட்ரம்ப், நான் பெரு மையுடன் பதவியேற்கும் திகதியான 2025 ஜனவரி 20 க்கு முன்னதாக பணயக்கைதிகள் விடுவிக்கப்படாவிட் டால், மத்திய கிழக்கில் இந்த அட்டூழி யங்களைச் செய்த பொறுப்பாளர்கள் நரக வேதனை அனுபவிப்பாளர்கள் என்று கூறியுள்ளார்.

கனடா முரசு

பக்கங்கள் 02

செவ்வாய்க்கிழமை 03/12/2024

## போலி மருத்துவர் கனடாவில் கைது

கனடாவில் சத்திர சிகிச்சை நிபுணர் என்ற போர்வையில் சிகிச்சை வழங்கிய நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

29 வயதான ரொறன்

02



# ட்ரம்பினுடன் சந்திப்பை முடித்துக் கொண்டு நாடு திரும்பினார் கனடிய பிரதமர் ட்ரூடோ

**கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அமெரிக்காவிற்கான பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ளார்.**

**கனடிய ஏற்றுமதி பொருள்களுக்கு வரி விதிப்பதாக புதிய அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் சமூக ஊடகம் வாயிலாக அறிவித்திருந்தார்.**

இந்த அறிவிப்பு தொடர்பில் கனடாவில் பெரும் சர்ச்சை நிலைமை உருவாகி இருந்தது.

பல்வேறு மாகாணங்கள் இந்த வரி விதிப்பு காரணமாக பொருளாதார பாதிப்புகளை எதிர் நோக்க நேரிடும் என கருத்து வெளியிடப்பட்டிருந்தது.

இவ்வாறான ஒரு பின்னணியில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அமெரிக்காவிற்கு பயணம் செய்து புதிய ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ள டொனால்ட் ட்ரம்பை சந்தித்திருந்தார்.

இது அதிகாரபூர்வமற்ற வகையில் இடம் பெற்றிருந்தது. இந்த சந்திப்பை முடித்துக்கொண்டு பிரதமர் ட்ரூடோ நாடு திரும்பியுள்ளார்.

எவ்வாறு எனினும் இந்த சந்திப்பின் போது வரி அறவீடு தொடர்பிலான எவ்வித உறுதி மொழிகளையும் டொனால்ட் ட்ரம்ப் வழங்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.




# கிட்ச்னர் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

கனடாவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

கனடாவின் கிட்ச்னர் பகுதியில் இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம் பெற்றுள்ளது. இந்த சம்பவத்தில் 39 வயதான நபர் ஒருவரே உயிரிழந் துள்ளார்.

சம்பவம் குறித்து அறிந்து கொண்ட பொலிஸார் துப்பாக்கிச் சூடு இடம் பெற்ற பகுதிக்குச் சென்றுள்ளனர்.

இதன் போது காயமடைந்த நிலையில் இருந்த ஒருவரை மீட்டு வைத்திய சாலையில் அனுமதித்துள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூடு திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த துப்பாக்கிச் சூடு குறித்து வாட்டர்லூ பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.



# ஒன்றாறியோவில் பனிப்புயல் தாக்கம்

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் பனிப்புயல் தாக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சில பகுதிகளில் ஒரு மீற்றர் அளவில் பனிப்பொழிவு பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பனிப்புயல் காரணமாக சுமார் 30,000 வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

வீதிகளில் பயணம் செய்பவர்கள் மிகுந்த அவதானத்துடன் பயணிக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஒன்றாரியோ மாகாணத்தின் சில பகுதிகளில் பெரு மளவு பனிப்பொழிவு பதிவாகியுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

பனிப்பொழிவினை அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் வாகன போக்குவரத்து மேற்கொள்வதில் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

# கனடாவிலிருந்து அடுத்த வருட இறுதியில் அதிகளவானோர் வெளியேறவேண்டிய நிலை

கனடாவில் அடுத்த வருடத்தின் இறுதியில் பாரிய அளவிலான புலம்பெயர்ந்தவர்கள் வெளியேறவேண்டிய நிலை ஏற்படுமென அந்நாட்டு புலம்பெயர்தல் துறை அமைச்சர் மார்க் மில்லர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அவர்கள் வெளியேற வேண்டிய நிலைக்கு அவர்களுக்கு வழங்கப்பட்ட பல மில்லியன் தற்காலிக அனுமதிகள் காலாவதியாக உள்ளமையே எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற புலம்பெயர்தல் குழு முன் விளக்கமளித்த மார்க் மில்லர், தற்காலிக அனுமதிகள் காலாவதியாகும் பெரும்பாலானோர் கனடாவிலிருந்து தாமாகவே வெளியேறக்கூடும் என கூறிய நிலையில், கொன்சர்வேட்டிவ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான றொம், சுமார் 4.9 மில்லியன் பேரின் தற்காலிக அனுமதிகள் காலாவதி ஆகும் நிலையில், அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதை கனடா அரசு எப்படி உறுதி செய்ய உள்ளது என்று கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த மில்லர், நமது நாட்டுக்குள் வருவோரில் பெரும்பாலானோர் தற்காலிகமாக வந்துள்ளதால், அவர்களுடைய அனுமதிகள் காலாவதியானபின் இங்கு தங்க அவர்களுக்கு உரிமை இல்லை, ஆகவே அவர்கள்



தாமாகவே வெளியேறிவிடுவார்கள் என்றார்.

அப்படி தாமாக வெளியேறாதவர்களை புலம்பெயர்தல் அமைச்சகம் எப்படி கையாளப்போகிறது என றொம் விடாமல் கேட்க, அவர்களை வெளியேற்ற கனடா எல்லைப் பாதுகாப்பு ஏஜன்சிக்கு உரிமை உள்ளது என்றார் மில்லர்.

இந்த நிலையில் தற்காலிக அனுமதி பெற்று கனடாவில் வசிக்கும் புலம்பெயர்ந்தவர்களுக்கு பெரும் சிக்கல் ஏற்படப்போவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## போலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரோவைச் சேர்ந்த நபர் ஒருவரை இவ்வாறு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தாம் ஒரு சத்திர சிகிச்சை மருத்துவர் எனக் கூறி நான்கு பெண்களுக்கு அழகு சாதன சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளார். இந்த நான்கு பெண்களுக்கும் உடல் பாகங்களில் மாற்றங்களை செய்யும் நோக்கில் சிகிச்சை அளிப்பதாக குறித்த நபர் கூறியுள்ளார்.

அதற்காக அவர் ஊசி மருந்தையும் நான்கு பெண்களுக்கும் ஏற்றியுள்ளார்.

எனினும், அந்த நபரின் சிகிச்சை முறையில் பெண்களுக்கு ஏற்பட்ட சந்தேகம் காரணமாக இது குறித்து விசாரித்த போது அவர் மருத்துவ சிகிச்சை அளிப்பதற்கு தகுதியுடையவர் அல்ல என்பது தெரியவந்துள்ளது.

இதனை தொடர்ந்து செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்படி நபரை பொலிஸார் கைது செய்து வழக்கு தொடர்ந்துள்ளனர்.

இவ்வாறான சம்பவங்களில் சிக்கியவர்கள் இருந்தால் அது குறித்து அறிவிக்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரியுள்ளனர்.

